**மன்றக் கூட்டப்பொருள்**

**30.06.2020ம் தேதி பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெறவுள்ள நகரமன்ற சதாரணக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல்**

**பொருள் எண்.01)** இந்நகராட்சி ஆணையாளர் (பொ) அவர்களின் மே–2020 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கு வைக்கப்படுகிறது.
அ.கு. 1) மன்றம் பதிவுசெய்யலாம்
ந.க.எண்.0665/2018/சி1

**தீர்மானம் எண். 116 – பதிவு செய்யப்பட்டது**

**பொருள் எண்.02)** இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் மே–2020 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கு வைக்கப்படுகிறது.
அ.கு. 1) மன்றம் பதிவுசெய்யலாம்.

**தீர்மானம் எண். 117 – அனுமதிக்கப்பட்டது.**

**பொருள எண். 03)** ஆற்காடு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் (COVID – 19) கொரோனா வைரஸ் தொற்று பரவாமல் இருப்பதற்கு தடுப்பு நடவடிக்கையாக பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில் நகராட்சிக்கு சொந்தமான மூன்று வாகனங்களில் பொருத்துவதற்கு மூன்று எண்ணம் ஒலிபெருக்கிகள் (AHUJA-AMPLIFIER) சப்ளை செய்தல் பணிக்கு தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று உள்ளூர் நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளிகள் பெறப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது,

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி விகிதம்.ரூ (3 எண்ணம்) |
|---|---|---|
| 1 | கந்தன் எலக்ட்ரானிக்ஸ் | 35850/– |
| 2 | ஸ்ரீ வெங்கட்டேஸ்வரா எலக்ட்ரானிக்ஸ் | 40950/– |
| 3 | அன்பு டிவி சென்டர் & ஹோம் அப்ளையன்சஸ் | 29400/– |

அகு:–
1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள அன்பு டிவி சென்டர் ஹோம் அப்ளையன்சஸ் நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கப்பட்டதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 118 – அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 04)** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 9, 20 மற்றும் 22 ஆகிய பகுதிகளில் பழுதடைந்துள்ள சிறுமின் விசைபம்புகள் பழுது பார்த்துக்கொள்ள தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கப்பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி விகிதம். |
|---|---|---|
| 1 | ஸ்ரீ விஜயலட்சுமி எலக்ட்ரிகல்ஸ் ஒர்க்ஸ் | 29,500/– |
| 2 | ஸ்ரீ பாலாஜி டிரேடர்ஸ் | 31,450/– |
| 3 | ஸ்ரீ கோபி டிரேடர்ஸ் | 31,000/– |

அ.கு.

**1)** மன்றம் அனுமதிக்கலாம்.

**2)** மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீ விஜயலட்சுமி எலக்ட்ரிகல்ஸ் ஒர்க்ஸ் நிறுவனத்திற்கு தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கப்பட்டதற்கும் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 119 – அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5)** இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் பயன்பாட்டில் உள்ள பொலிரோ ஈப்பு எண் TN 73E 0138 என்ற வாகனம் பழுது ஏற்பட்டதால் அவசர அவசியம் கருதி இதனை உடனடியாக நிவர்த்தி செய்ய வேலூர் பொலிரோ வாகன அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான ஜெயின் கார்ஸ் என்பவரிடம் நிவர்த்தி செய்து கொள்ள தோரய செலவினத் தொகை ரூ.60,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்ப் :-

1) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2) அவரச அவசியம் கருதி இந்நகராட்சியின் பொலிரோ ஈப்பு TN73E0138 என்ற வாகனத்தை அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான வேலூர் ஜெயின் கார்ஸ்–ல் உடனடியாக பழுதுகளை நீவர்த்தி செய்ய தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்றமைக்கும் இச்செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்.766/2020/எச்1,

**தீர்மானம் எண். 120 – அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6)** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 1, 3 மற்றும் 5 ஆகிய பகுதிகளில் உள்ள சிறுமின்விசை பம்புகள் பழுதடைந்துள்ளதால் பொது மக்களின் நலன் கருதி மேற்கண்ட பகுதியில் உள்ள சிறுமின்விசை பம்புகளை பழுது பார்த்துக்கொள்ள உள்ளூர் நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளிகள் பெற்று பழுது பார்க்கும் பணியினை மேற்கொள்ள தோராய மதிப்பீட்டுத் தொகை ரூ.30,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.

**1)** மன்றம் அனுமதிக்கலாம்.

**2)** மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 121 – அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.7)** இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை பெருந்தலைவரின் செயல் முறைகள் கடிதம் ந.க.எண். அ2/3772/2019, நாள். 03.04.2020ன் படி பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி வளர்ச்சி திட்டம் 2019–20ஆம் ஆண்டின் கீழ் ஆற்காடு நகராட்சிக்குபட்ட ஆரணி சாலை, கலவை சாலை மற்றும் ஜீவாணந்தம் சாலை சந்திப்பில் உயர் கோபுர மின் விளக்கு (12மீ 6 செட் 200 Watts LED) அமைத்தல் பணிக்கு ரூ.7.75 லட்சத்திற்கு

நிர்வாக அனுமதி அளித்து உத்தரவிடப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பகுதிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

1) மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 122 – பதிவு செய்யப்பட்டது**

**பொருள் எண். 8)** இந்நகராட்சியில் வருவாய் உதவியாளராக பணிபுரிந்து வந்த திரு.அ.சிபி என்பவர் 12.01.2020 அன்று பணியிடையில் மரணமடைந்ததால், வருவாய் உதவியாளர் பணியிடம் ஒன்று தொடர்ந்து காலியாக உள்ளது.

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் வேலூர் அவர்களின் ந.க. எண். 2358/2020/அ2, நாள்.29.06.2020 கடிதத்தில் ஆற்காடு நகராட்சியில் காலியாக உள்ள வருவாய் உதவியாளர் பணியிடத்திற்கு மேல்விஷாரம் நகராட்சியில் வருவாய் உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு.சி.மீரா உசேன், என்பவர் தனது குடும்ப சூழ்நிலை காரணமாக பணியிடம் மாறுதல் கோரியுள்ளார் என்பது குறித்து கடிதம் பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் இந்நகராட்சிக்கு பணியிட மாறுதல் செய்து கொள்ள நகர்மன்ற தீர்மானம் இயற்றி அனுப்ப தெரிவிக்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

மேல்விஷாரம் நகராட்சியில் வருவாய் உதவியாளராக பணிபுரியும் திரு.சி.மீராஉசேன் என்பவரை ஆற்காடு நகராட்சியில் காலியாக உள்ள வருவாய் உதவியாளர் பணியிடத்திற்கு பணிமாறுதல் செய்ய மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ந.க.எண். 0902/2020/சி1.

**தீர்மானம் எண். 123 – அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 9)** இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் Covid-19 கொரோனா வைரஸ் தொற்று பரவாமல் தடுக்கும் நடவடிக்கையாக நோய் கட்டுப்பாட்டு பகுதிகளில் (Containment zone) தடுப்பு வேலி அமைக்கும் பணிகள் மேற்கொள்வதற்கான தோராய மதிப்பீட்டுத் தொகை ரூ.2.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிபப் :-

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட செலவினத்தை தற்போது பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் இத்திட்டத்திற்கென SDRF 2019-20 ல் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் போது இத்தொகையினை ஈடு செய்துக்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 124 – அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 10)** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 1, 3 மற்றும் 5 ஆகிய பகுதிகளில் பழுதடைந்துள்ள சிறுமின் விசைபம்புகள் பழுது பார்த்துக்கொள்ள தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கப்பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி விகிதம். |
|---|---|---|
| 1 | ஸ்ரீ விஜயலட்சுமி எலக்ட்ரிகல்ஸ் ஒர்க்ஸ் | 29,500/– |
| 2 | ஸ்ரீ பாலாஜி டிரேடர்ஸ் | 31,450/– |
| 3 | ஸ்ரீ கோபி டிரேடர்ஸ் | 31,000/– |

அ.கு.
**1)** மன்றம் அனுமதிக்கலாம்.
**2)** மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீ விஜயலட்சுமி எலக்ட்ரிகல்ஸ் ஒர்க்ஸ் நிறுவனத்திற்கு தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கப்பட்டதற்கும் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 125 – அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.11)** இந்நகராட்சிக்குட்பட்ட பேருந்துநிலையத்தில் உள்ள அம்மா உணவகத்தில் உணவு சமைப்பதற்கு புதிதாக Bioler சப்ளை செய்து பொருத்துதல் பணியினை திருவாளர் TITAN ENTERPRISES, RANIPET நிறுவனத்தின் மூலம் ரூ.**72000**/–க்கான மதிப்பீட்டில் நகராட்சிகள் சட்டம் பிரிவு **15**ன் கீழ் பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வையிக்கும் பதிற்கும் வைக்கப்படுகிறது.
அ.கு. **1)** மன்றம் பதிவுசெய்யலாம்.

**தீர்மானம் எண். 126 – பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்.12)** இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் தொற்று பரவாமல் இருப்பதற்கு பொது மக்களின் நலன் கருதி பேரூந்து நிலையம் நுழைவுவாயில் (ம) நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பிரதான சாலைகளை இணைக்கும் சந்துபகுதி மற்றும் தெருக்களில் வாகனங்கள் போக்குவரத்தை துடுக்கும் வகையில் G.I. தகடு வைத்து துடுப்பு வேலி அமைத்தல் பணியினை திருமதி. பீ. ஹயாதி பீ ஒப்பந்ததாரர் மூலம் ரூ.**32,850**/–க்கான செலவனித்தில் SDRF 2019-20ல் நகராட்சிகள் சட்டம் பிரிவு **15**ன் கீழ் பணி மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :-
மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 127 – பதிவு செய்யப்பட்டது,**

**பொருள் எண்.13)** இந்நகராட்சியில் தூய்மை பாரதம் – திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நடைபெறும் Biominning பணிக்கு Third Party Inspection (PMC) பணி மேற்கொள்வதற்கு Consultancy fees ரூ.7,08,000/–ஐ Center for Environmental studies. Anna University, Chennai-600025–க்கு வங்கிவரைவோலையாக செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலக குறிப்பு :-
1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை Biomining நிதி ஒதுக்கீட்டில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 128 – அனுமதிக்கப்பட்டது.**

(ஒப்பம்) **திரு.கௌ.அனந்தபத்மநாபசிவம்,**
தனி அலுவலர், ஆற்காடு நகராட்சி

நாள் : 30.06.2020

**// உண்மை நகல் //**

**ஆணையாளர்,**
**ஆற்காடு நகராட்சி.**